## FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8033656

1. District மாவட்டம் : தேனி மாவட்டம் PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரி Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 02/18 Date: நாள் 14.06.18

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 Sections பிரிவுகள்: 7, 13(2) r/w 13(1)(d)
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 15.06.2016 Date to : நாள் வரை 17.03.2017
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.06.2018 Time : நேரம் 14.00 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 14.06.2018 Time : நேரம் 14.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக தபாலில் வந்த புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 15 கி.மீ தென்மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி —
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. சின்னன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் தங்கத்தக்கண்ணுத்தேவர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1957 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் மண் இவார் (g) Address : முகவரி வார்டு.17, சொக்கநாதபுரம், சின்னமனூர், உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) M. சாம்பசிவம், உதவி இயக்குனர், கனிமம் மற்றும் சுரங்கத்துறை, தேனி மாவட்டம்.
   2) கார்த்திமணி, S.R. கிரீன்ஸ்.
   3) சங்கீத்குமார், S.R. கிரீன்ஸ்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   முதற்கட்ட விசாரணை செய்யப்பட்டது.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

— கணினியின் தட்டச்சு செய்யப்பட்ட தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS ........................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்டப்பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் திரு. M. சந்திரசேகரன், DSP, V&AC, சேலம். பதவி ........ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு புகார்தாரருக்கு தெரிந்தவர் அறிக்கையின் நகல் தபால் மூலம் அனுப்பப்பட்டது.

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(signature) 14/6/18

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
14.06.2018 at 16.30 Hrs.

Name: பெயர் P. சந்திரராஜன்
Rank: நிலை காவல் ஆய்வாளர், ஊ.த.க பிரிவு, சேலம்.

12. F.I.R. contents (Attach separate sheet if required):
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.**2/2018**-ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

குற்றவாளி:

1. திரு.எம்.சாம்பசிவம்
   உதவி இயக்குநர்,
   கனிமம் மற்றும் சுரங்கத்துறை
   தேனி மாவட்டம்.
2. கார்த்திமணி
   எஸ்.ஆர். குரூப்ஸ்
3. சங்கீத்குமார்
   எஸ்.ஆர். குரூப்ஸ்

சமர்ப்பிக்கப்படுகிறது: இன்று 14.06.2018ம் தேதி 14.00 மணிக்கு மார்ஜினில் கண்ட எதிரிகள்மீது நான் ஏற்கனவே முதற்கட்ட விசாரணை (Preliminary Enquiry) செய்து அனுப்பியிருந்த அறிக்கையை தொடர்ந்து சென்னை, ஊழல் கண்காணிப்பு ஆணையர் அவர்களின் உத்தரவு கடிதம் நாள். 24.05.2018 மற்றும் இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை அவர்களின் குறிப்பாணை நாள் 28.05.2018 ஆகிய உத்தரவுகளின்படி தேனி மாவட்டம், சின்னமனூர், சொக்கநாதபுரத்தை சேர்ந்த கருத்தக்கண்ணுத்தேவர் மகன் திரு.சின்னன் அவர்களது புகார் நாள் 20.03.2017 பேரில் கீழ்க்கண்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. மேற்கண்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- நான் மேற்கண்ட முகவரியில் வசித்துவருகிறேன். நான் கடந்த 01.06.2015ம் தேதி சின்னமனூர் கருங்கட்டான் கிராமபுலத்தில் சர்வே எண். 235/2-ல் கட்டுப்பட்ட 6 ஏக்கர் 44 சென்ட் நிலத்தில் 2 ஏக்கர் 68 சென்ட் நிலத்தை சின்னமனூர் SRO No.2237/2015-ன்படி திருமதி. தனலட்சுமி, திருமதி. வைரமணி அவர்களிடமிருந்து பதிவு கிரையம் பெற்றேன். அதன் டவுன் சர்வே எண்.9/4 மேற்படி நிலத்தில் தனியார் மண் குவாரி அமைக்க தேனி மாவட்ட ஆட்சியரிடம் ந.க.எண். 191/Mines/2015-ன்படி அனுமதி பெற்று 15.06.2016ம் தேதி ஒப்பந்தம் ஏற்பட்டு இதுநாள்வரை அரசு விதித்த விதிமுறைகளுக்கு உட்பட்டு என் பெயரில் மண் குவாரி செயல்பட்டுவருகிறது. சட்டவிதிகளுக்கு உட்பட்டு என் பெயரிலுள்ள மண் குவாரியில் மண் எடுக்க AD Mines அவர்களிடம் நடைச்சீட்டு பெற்று வந்தேன். ஒரு நடைச்சீட்டுக்கு ரூ.75வீதம் வங்கியில் செலுத்தி AD Mines அவர்களிடம் ஒப்படைத்தால் நடைச்சீட்டு வழங்கவேண்டும். ஆனால் நான் அனுமதி பெற்ற காலம் முதல் AD Mines அலுவலகத்தில் SR Groups-ஐ சேர்ந்த மணல் மாபியாவினர் சிலருக்கு இருக்கைகள் ஒதுக்கப்பட்டு அவர்களுக்கு ஒரு நடைச்சீட்டுக்கு ரூ.100 வீதம் செலுத்தினால் மட்டுமே தேனி மாவட்ட உதவி இயக்குநர், புள்ளியியல் மற்றும் சுரங்கத்துறை (AD Mines) நடைச்சீட்டு வழங்க உத்தரவிடுவார். SR Groups-ல் பணம் கட்டவில்லை என்றால் நடைச்சீட்டு கிடைக்காது. இதனால் வேறு வழியின்றி நானும், என்னைப்போல் சிலரும் செலுத்திவந்தோம். இந்நிலையில்தான் SR Groups தலைவர் சேகர் ரெட்டி கைது செய்யப்பட்ட பின் ஒருவாரம் காலம் மாபியாவின் தொந்தரவு இல்லாமல் இருந்தது. அதன்பின் தேனி மாவட்ட AD Mines அலுவலகத்திற்கு வந்த SR Groups சேர்ந்த கார்த்திமணி, சங்கீத்குமார் ஆகியோர்கள் சட்டத்திற்கு புறம்பாக தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள AD Mines அலுவலகத்தில் அமர்ந்துகொண்டு ஒரு நடைச்சீட்டுக்கு ரூ.250வீதம் கட்டாய வசூல் செய்கின்றனர். ஏற்கனவே விடுபட்டுபோன நாட்களுக்கும் AD Mines கணக்கிட்டு SR Group-ஐ சேர்ந்த கார்த்திமணி, சங்கீத்குமார்

ஆட்களுக்கு பணம் ரூ.20,000 கொடுத்தால்தான் நடைச்சீட்டு வாங்கமுடியும் என்ற நிலை ஏற்பட்டதால் நான் 04.02.2017ம் தேதியிட்டு என் மகன் கார்த்தியசாமி பெயரில் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, சின்னமனூர் வங்கி கிளையின் காசோலை வழங்கினேன். ஏற்கனவே அதனை நான் என் செல்போனில் வீடியோ எடுத்துள்ளேன். ஏற்கனவே நான் இதற்கு முன்பாக இதுபோல் சின்னமனூர் SBI வங்கி காசோலை எண். 839206 என்ற எண்ணுள்ள காசோலையை கொடுத்த வகையில் தேனி மாவட்ட AD Mines மூலம் SR Group-க்கு ரூ.20,000-த்தை வசூலுக்கு போட்டு பணத்தை கலெக்ஷன் செய்துகொன்டனர். மேற்படி காசோலையை கொடுத்தபோது நான் வீடியோ எடுத்த விபரம் தெரிந்த AD Mines-ம் SR Group ஆட்களும் மேற்படி காசோலையை வசூலுக்கு போடாமல் இரண்டு நாட்கள் கழித்து ரொக்கமாக பணத்தை பெற்றுக்கொண்டு மேற்படி காசோலையை திருப்பிக்கொடுத்துவிட்டனர். தேனி மாவட்ட AD Mines அதிகாரி சாம்பசிவம் ஒரு இடைத்தரகர் போல் செயல்பட்டு வருகிறார். நான் பலமுறை எதிர்த்து பேசியதால் AD Mines-ம் SR Group ஆட்களும் எனக்கு வேண்டாத என் உறவினர்களான தெய்வம், மணிகண்டன், பிச்சைமணி ஆகியோர்கள்மூலம் பெட்டிசன் போடச்செய்து மத்தியஸ்தம் செய்வதுபோல் என் கவனத்தை திசை திருப்பி வருகின்றனர். நான் இதுவரை ரூ.5,00,000-ம் வரை AD Mines மூலம் SR Group ஆட்களுக்கு ரொக்கமாக பல தவணைகளில் AD Mines மற்றும் SR Group ஆட்களின் மிரட்டலுக்கு பயந்து பணம் கொடுத்துள்ளேன். இதுபோல் தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து தனியார் மண் குவாரி மற்றும் அரசு மண் குவாரி லைசென்ஸ்தாரர்களிடம் மிரட்டி பணம் பறித்து வருகின்றனர். ஏற்கனவே 10.03.2017ம் தேதி உள்ளாட்சி டுடே என்ற நாளிதழில் "தேனியில் கனிம கொள்ளை துணைபோகும் அதிகாரிகள்" என்ற தலைப்பில் செய்திகள் வந்த பின்பும், கடந்த 17.03.2017ம் தேதி என்னிடம் கூடுதலாக ஒரு நடைச்சீட்டுக்கு எவ்வித ஆதாரமுமின்றி ரூ.250 வீதம் கொடுத்தால்தான் நடைச்சீட்டு வழங்கமுடியும் என AD Mines அவரது அலுவலகத்தினருக்கு போன்மூலம் உத்தரவிட்டார். அதனால் எனக்கும் SR Group சேர்ந்தவர்களுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. தற்செயலாக வந்த தினமலர் பத்திரிக்கையினர் செய்தி சேகரித்தனர். மேற்படி செய்தி 18.03.2017ம் தேதி தினமலர் நாளிதழில் மாவட்ட செய்திகள் பக்கத்தில் வந்துள்ளது. மேற்படி அலுவலகத்திற்கு வரும் நபர்கள் சம்மந்தமாக விபரங்கள் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வைத்துள்ள CCTV கேமராவினை ஆய்வு செய்தால் தெரியவரும். கடந்த ஒரு வருடத்திற்குண்டான CCTV கேமராவின் footage-ஐ பாதுகாப்பாக வைக்கும்படி வேண்டுகிறேன். எனவே அய்யா அவர்கள் கருணை கூர்ந்து தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குள் இயங்கும் உதவி இயக்குநர், புள்ளியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலகத்திலிருக்கும் உதவி இயக்குநர் சாம்பசிவம் அவர்கள்மீதும், மேற்படி அலுவலகத்தில் அரசு அதிகாரிகள்போல் சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டு நடைச்சீட்டுக்கு அதிகமாக பணம் வசூல் செய்யும் மணல் மாபியா கும்பலைசேர்ந்த கார்த்திமணி, சங்கீத்குமார் ஆகியோர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள Sd/-xxxxxx (சின்னன்), சின்னமனூர் 20.03.2017 இணைப்பு. புகார்தாரர் தனது புகார்மனுவுடன் இணைக்கப்பட்ட சி.டி-1(Moserbaer DVD- 4.7GB). இது சம்மந்தமாக தேனி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண். 02/2018 u/s. 7 and 13(2) r/w.13(1)(d) ஊழல் தடுப்பு சட்டம் -1988-ன்படி வழக்கு பதிவு செய்யப்படுகிறது. இதன் அசல் நகல் தலைமை குற்றவியல் நடுவர் மற்றும் தனிநீதிபதி அவர்கள், தேனி நீதிமன்றத்திற்கும், மற்ற நகல்கள் உயர்அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டது.

இணைப்பு: புகார் மனு நகல்.

[signature] 14/6/18
(P. Sundararajan)
Inspector of Police
V&A.C, Theni